# பொதுப்பணித்துறை

## மானியக் கோரிக்கை எண் - 39

## அறிவிப்புகள்
## 2021-2022

**எ.வ. வேலு**
பொதுப்பணித்துறை அமைச்சர்

# 1. தரக்கட்டுப்பாடு மேம்படுத்துதல்

கட்டட கட்டுமானங்களில் பிரதானமாக பயன்படுத்தப்படும் நொறுக்கப்பட்ட கல் மணல் அல்லது தயாரிக்கப்பட்ட மணல் **(எம்.சாண்ட்)** தரத்தினை உறுதி செய்யும் பொருட்டு தனியாரால் விற்கப்படும் எம்.சாண்டினை பரிசோதனை செய்து தரமற்ற எம்.சாண்டினை கண்டறிந்து, கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 2. பொதுப்பணித்துறை நிருவாக சீரமைப்பு

- அனைத்து அலுவலக நடவடிக்கைகளும் கணினி மயமாக்கப்பட்டு கைபேசி மூலம் கண்காணிக்க உரிய திட்டம் செயல்படுத்தப்படும்.
- தொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஒப்புதலுக்கான தலைமைப் பொறியாளர், கண்காணிப்புப் பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர்களுக்கு அதிகார வரம்பு உயர்த்தப்படும்.
- மதிப்பீடுகள் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் தர விவர தகவல்கள் (**Standard Data**) புதுப்பித்து திருத்தி அமைத்திட தகுதியான குழு அமைக்கப்படும்.

## 3. பொதுப்பணித்துறை மறு சீரமைப்பு

சென்னை மற்றும் திருச்சி மண்டலங்களை மறுசீரமைத்து கோயம்புத்தூரை தலைமை இடமாக கொண்டு ஒரு கூடுதல் மண்டலம் உருவாக்கப்படும்.

## 4. ஒப்பந்த முறை சீரமைப்பு

- ஒப்பந்தக்காரர் பதிவு ஆண்டுக்கு ஒரு முறை புதுப்பித்தல் என்பதிலிருந்து மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை என மாற்றப்படும்.
- புதிய ஒப்பந்தக்காரர் பதிவு மற்றும் புதுப்பித்தல், மண்டல தலைமைப் பொறியாளர்கள் அளவிலேயே இனி மேற்கொள்ளப்படும்.
- தொகுப்பு முறையிலான ஒப்பந்தப்புள்ளி **(Package Tender System)** கோரும் நடைமுறை இரத்து செய்யப்படும்.
- பொதுப்பணித்துறை வாயிலாக மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகளில் ரூ.15.00 கோடி மதிப்பீட்டிற்குள்ளான சிவில் மற்றும் மின் பணிகளுக்கு தனித்தனியாக ஒப்பந்தம் **(Separate Agreement)** மேற்கொள்ளப்படும்.
- முன்தகுதி ஒப்பந்தப்புள்ளிக்கான நிதி உச்சவரம்பு ரூ.2 கோடியிலிருந்து ரூ.5 கோடியாக உயர்த்தப்படும்.

## 5. புதிய சுற்றுலா மாளிகைகள்

- 6 புதிய மாவட்ட தலைமையகங்களில் (செங்கல்பட்டு, இராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், தென்காசி மற்றும் மயிலாடுதுறையில்) தலா ரூ.7.05 கோடி மதிப்பீட்டில் புதிய சுற்றுலா மாளிகைகள் ரூ.42.30 கோடி மதிப்பீட்டில் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்படும்.
- திருச்சி, கடலூர், நாகப்பட்டிணம் மதுரை, திருவண்ணாமலை மாவட்டத்தில் செய்யாறு மற்றும் ஜமுனாமரத்தூர் ஆகிய ஆறு இடங்களில் ரூ.37.98 கோடியில் கூடுதல் சுற்றுலா மாளிகைகள் கட்டப்படும்.
- விருதுநகர் மாவட்டம், சாத்தூர் நகரில் ஒரு சுற்றுலா மாளிகை கட்டப்படும்.

## 6. சுற்றுலா மாளிகைகள் மேம்படுத்துதல்

மதுரையில் உள்ள சுற்றுலா மாளிகை பிரதான கட்டடம் மற்றும் கூடுதல் கட்டடங்களை ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

# 7. தலைமைக் கட்டட கலைஞர் மற்றும் பொறியாளர்களுக்கு வாகனங்கள் வழங்குதல்

தலைமைக் கட்டட கலைஞர், கண்காணிப்புப் பொறியாளர்கள், செயற்பொறியாளர்களுக்கு பழைய வாகனங்களுக்கு பதிலாக 8 புதிய மகிழுந்துகள் மற்றும் 22 புதிய ஈப்புகள் ரூ.2.40 கோடி மதிப்பீட்டில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 8. உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

- கடலூரில் 3 உபகோட்டங்கள், 5 பிரிவு அலுவலகங்கள் உள்ளடக்கிய ஒரு கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம் ரூ.4.65 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.
- கள்ளக்குறிச்சியில் மருத்துவப் பணிகள் மேற்கொள்ளும் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்ட அலுவலகங்கள் ரூ.2.75 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.
- மதுரையில் ரூ.75 இலட்சம், திண்டுக்கல்லில் ரூ.45 இலட்சம், காரைக்குடியில் ரூ.100 இலட்சம் மற்றும் தூத்துக்குடியில் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் உபகோட்ட அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும்.

- சென்னை, தரமணி, பொதுப்பணித்துறை வளாகத்தில் மழைநீர் வடிகால் அமைப்புகள், சேதமடைந்த உட்புற சாலைகள், சுற்றுச்சுவர் மற்றும் இதர மேம்பாட்டுப் பணிகள் ரூ.4.68 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.
- சென்னை சேப்பாக்கம் பொதுப்பணித்துறை வளாகத்தில் பணிபுரியும் பெண் பணியாளர்களுக்கு ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் உணவுக்கூடம் அமைக்கப்படும்.

## 9. தலைமைச் செயலக பொதுப்பணித்துறை அலுவலக உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் கணினி மயமாக்குதல்

தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித்துறை அலுவலக இருக்கை இடவசதிகளை மேம்படுத்தும் பணிகள் ரூ.82 இலட்சம் மதிப்பீட்டிலும், அலுவலகத் தேவைக்கான கூடுதல் கணினி 65 எண்களும், 5 மடிக்கணினி, 10 வலுவான அச்சுப்பொறிகள், 15 அச்சுப் பொறிகள் மற்றும் 10 ஊடுகதிர் படக்கருவிகள் ஆகியவை ரூ.50 இலட்சம் மதிப்பீட்டிலும் மொத்தம் ரூ.132 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 10. புதிய குடியிருப்புகள் கட்டுதல் மற்றும் குடியிருப்புகள் புனரமைத்தல்

- நீலகிரியில் அரசுப் பணியாளர்களின் பழைய குடியிருப்புகளுக்கு பதிலாக 160 புதிய குடியிருப்புகள் கட்டும் பணிகள் ரூ.56.70 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.
- பொதுப்பணித்துறை பொறியாளர்களுக்கு திருச்சியில் ரூ.3.05 கோடி, திருவாரூரில் ரூ.1.00 கோடி, கோயம்புத்தூரில் ரூ.4.25 கோடி, உதகமண்டலத்தில் ரூ.1.70 கோடி மதிப்பீட்டில் 23 புதிய குடியிருப்புகள் கட்டப்படும்.
- சென்னை தண்டையார்பேட்டை பொதுப்பணித்துறை பண்டகசாலை அரசு ஊழியர் குடியிருப்பில் 9 தொகுப்பில் 54 குடியிருப்புகள் ரூ.1.33 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

**எ.வ. வேலு**
**பொதுப்பணித்துறை அமைச்சர்**